**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-2 | Date | : 10.12.2024 |
| Case No. | : O.S. 339/2019 | Nationality | : Indian |
| Name | : ராமமூர்த்தி | Religion | : |
| Father's/Husband's Name | : சோமசுந்தரம் | Age | : 75 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சாட்சி சொல்லும் விவரங்களை நீதிமன்றத்தில்தான் முதன்முறையாக சொல்கிறேன் என்றால் சரிதான். முருகானந்த வள்ளியின் தாயார் பெயர் என்னவென்றால் ஜெகதாம்பாள் ஆகும். தற்போது நீதிமன்றத்தில் நிருபண வாக்குமூலத்தை காண்பித்து அது என்னவென்று கேட்டபோது கண் சரியாக தெரியாததால் படிக்க முடியவில்லை என்று சாட்சி கூறுகிறார். எவ்வளவு வருடமாக எனக்கு கண் பார்வை சரியாக தெரியவில்லை என்றால் சுமார் 5 வருடங்களாக தெரியவில்லை. நான் நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்பு வழக்கு பற்றி வேறு ஏதும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை யார் அழைத்து வந்தது என்றால் முருகானந்த வள்ளி அழைத்து வந்தார். என்ன சொல்ல வேண்டும் என சொல்லி முருகானந்த வள்ளி அழைத்து வந்தாரா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்

தெரியுமா என்றால் தெரியும். அதனை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. கந்தசாமி என்பவர் யார் என்றால் அவர் தாவா சொத்தை விற்பனை செய்தவர் ஆவார். கந்தசாமிக்கு அரசாங்கத்தால் ஒப்படைவு செய்யப்பட்ட ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த காலத்தில் ஒரு சொத்து ஒப்படைவு செய்யப்பட்டால் சர்வே எண் குறிப்பிட்டு அதன் பாகம் என்று குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். ஒப்படைவு கொடுக்கப்பட்ட பிறகு அரசாங்கத்தால் சொத்து உட்பிரிவு செய்யப்படும் என்றால் சரிதான். கந்தசாமிக்கு தாவா சொத்து ஒப்படைவு வழங்கப்பட்டது எனக்கும் தெரியும் என்றால் சரிதான். ஒப்படைவு அளிக்கப்பட்ட பிறகு தாவா சொத்து உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எவ்வளவு நாட்களுக்கு முன்பு உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் 1983 ம் ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டது. உட்பிரிவு செய்யப்பட்ட சொத்துக்கள் எத்தனை நபர்களுக்கு ஒப்படைவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. முருகானந்த வள்ளி சொத்திற்கு அருகில் கலியபெருமாள் சொத்துள்ளது என்றால சரிதான். கலியபெருமாள் சொத்திற்கு அடுத்து சத்தியமூர்த்தியின் சொத்துள்ள என்றாலும் அதில் அவர் வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரிதான். நான் பல உண்மைகளை மறைத்து முருகானந்த வள்ளிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து சம்மந்தமாக பட்டா பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு சொத்து உள்ளதா என்றால் எனது மனைவி பெயரில் உள்ளது. நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு விவசாய கூலி அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது. எந்த வகை அடையாள அட்டை எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. எந்த கூட்டுறவு சங்கத்தில் மூலம் எனக்கு மானியம் வருகிறது என்றால் எனக்கு பணமே வரவில்லை.

நான் விவசாய கூலி இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.10 19:04:55 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.